வரையறுக்கப்பட்ட இன்போர்மேஷன் என்ட் கம்யுனிகேஷன் டெக்னோலொஜி ஏஜென்சி (தனியார்) கம்பனியின (“கம்பனி) மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (“தொகுதி”) ஆகியவற்றின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்க சமர்ப்பிக்கப்பட வேண்டும் என் நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) திறைசேரி மானியங்கள், தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள், முற்பணங்கள், சென்மதிகள், பணிக்கொடை ஒதுக்கங்கள் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ஆகியவற்றுக்கான பேரேட்டுக் கணக்குகள் காணப்பட்ட போதிலும், ரூபா 1,157,119,346 கூட்டுத்தொகையானது குறிப்பிட்ட பேரேட்டுக் கணக்குகளில் பதியப்படாது பரீட்சை மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் கட்புலச் சொத்துக்கள் ஆகியவற்றின் கிரயம் முறையே ரூபா 2,140,197,281 மற்றும் ரூபா 5,528,113 ஆக காணப்பட்டது. எனினும், நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் விரிவான பட்டோலைகள் ஆகியன கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரமாக கணக்காய்வின் போது அந்த மீதிகளின் செம்மைத்தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களுக்கான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வானது குறைந்து செல்லும் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாண வகையில் பெறுமானத்தேய்வானது நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) இ.க.நி 16 இன் 63 ஆம் பந்தியின் பிரகாரம், அழிவு நட்டங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், கம்பனியானது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான அழிவுநட்டச் சோதனையை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) இ.க.நி 19 இன் 55 ஆம் பந்திக்கு முரணாக கம்பனியானது ரூபா 39,149,400 தொகையான அனைத்து ஊழியர்களுக்குமான ஓய்வூதிய நலனை நிதியாணடின் இறுதி மாதத்திற்கான சம்பளத்தின் அரைவாசியின் அடிப்படையில் கணிப்பிட்டிருந்தது.

(ஊ) கிடைத்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மானியச் சொத்துக்களுக்காகன ரூபா 295,976,497 தொகையான பிற்போடப்பட்ட பொறுப்புகள மற்றும் ரூபா 144,192,281 கூட்டுத்தொகை வருமானக்கூற்றிற்கு மாற்றப்பட்டமைக்கான அடிப்படை ஆகியவற்றின் செம்மைத்தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(எ) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 1,635,436,951 ஆகும். எனினும், கம்பனியின் மொத்த பொறுப்புகள் அதன் மொத்த சொத்துக்களை ரூபா 1,855,406,085 இனால் விஞ்சியிருந்ததுடன், கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நடைமுறைப் பொறுப்புகள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூபா 1,816,256,715 இனால் விஞ்சியிருந்தது. இந்த நிகழ்வுகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையில் காணப்படும் பொருண்மையான நிச்சயமற்ற தன்மையை சுட்டிக் காண்பிக்கின்றன. கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் (அவற்றிற்கான குறிப்புகள்) முகாமைத்துவத்தின் திட்டங்கள் அல்லது அவற்றை

கட்டுப்படுத்தும் காரணிகளின் நிலவுகை ஆகியவை உரிய வெளிப்படுத்தல்களுடன் காண்பித்திருக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். இதற்கிணங்க கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதி நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வருவனவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

(அ) கணக்காய்விற்கான அடிப்படை மற்றும் கணக்காய்வு விடயப்பரப்பு மற்றும் எல்லைகள் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஆகும்.

(ஆ) எனது அபிப்பிராயத்தின் பிரகாரம்:

- கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கான போதியளவான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அத்துடன், எனது பரீட்சிப்பின் பிரகாரம் கம்பனியால் முறையான கணக்கீட்டு பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது புலப்பட்டது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளை கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு அதன் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விட குறைவாக உள்ள போது, சபையானது அந்த விடயம் தொடர்பில் அறிந்த இருபது வேலை நாட்களினுள் அதன் பங்குதாரர்களுக்கான சிறப்பான பொதுக்கூட்டமொன்றினை வைத்து கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தின் தன்மை மற்றும் அதன் தாக்கம், கம்பனியால் அவ்வாறான நட்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்காக அல்லது அந்த நட்டத்திலிருந்து மீள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்க வேண்டும். எனினும், தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விட குறைவாக உள்ள போதிலும் கம்பனியின் பணிப்பாளர் சபை அந்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்ய தவறியிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனி மற்றும் தொகுதி ஆகியவற்றின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறுகள் முறையே ரூபா 1,635,436,951 மற்றும் ரூபா 1,624,891,509 ஆன நட்டமாக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் முறையே ரூபா 11,271,579 மற்றும் ரூபா 14,169,209 ஆன மிகையை

கொண்டிருந்தன. வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான ரூபா 1,367,852,598 ஆன அதிகரிப்பானது இந்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

கம்பனியின் மற்றும் தொகுதியின் கடந்த வருடத்திறாக நடைமுறை விகிதம் முறையே 1:1.7 மற்றும் 1:1.4 ஆக காணப்பட்டதுடன், அது கடந்த வருடத்தில் முறையே 1:42 மற்றும் 1:31 ஆக காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

பின்ரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரச்சட்டத்தின் பிரிவு 06(2) | அரசின் முதலாவது இலத்திரனியல் கொள்கையானது 2010 – 2012 ஆகிய 03 வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், கொள்கை சீர்திருத்தம் / திருத்தங்கள் மேற்கொள்ளும் நடைமுறையானது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 செப்தம்பர் 06 ஆந் திகதி வரையிலும் அது நிறைவ செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ள போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பதினாறு மாத தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| i. 5.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கையில் கோரப்பட்டதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 7.4.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மெய்மையாய்வின் போது சில நிலையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே அந்த நிலையான சொத்துக்களின் நிலவுகை தொடர்பில் கணக்காய்வின் போது சந்தேகத்திற்குரியதாக இருந்தது. |

iii. 9.2 ஆம் பிரிவு

பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கம்பனியின் தற்போதைய பதவியணியினருக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், கம்பனியின் பதவியணி தேவைப்பாடு இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியினால் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்விறகான நடைமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை - 2006

i. 2.8.4 ஆம் பிரிவு

செயற்திட்ட பெறுகைகள் குழுவின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு பெறுகைகள் தொடர்பான அறிவுடைய ஆகக்குறைந்தது உரு அங்கத்தவரேனும் வரிசை அமைச்சினால் அல்லது பெறுகை நிறுவனத்திலிருந்து புறம்பாக நியமிக்கப்பட வேண்டும். எனினும், கம்பனியானது பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட தேவைப்பாட்டினை பூர்த்தி செய்திருக்கவில்லை.

ii. 4.2.1(இ) ஆம் பிரிவு

கம்பனியானது 2017 ஆம் ஆண்டிற்கான விரிவான பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்க தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 568.87 மில்லியன் கிரயமான 77 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. இந்த செயற்திட்டங்களுள் 7 செயற்திட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்டவாறு 100 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைந்திருந்ததுடன், 54 செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட நிறைவுத் திகதியில் 0 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைந்திருந்தது. மேலும், கடந்த வருடத்தில் நிறைவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த 13 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடங்களின் செயற்திட்டங்களின் குறைவான செயன்முன்னேற்றத்தினை கருத்திற்கொள்ளாது 28 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு ரூபா 15,000 மில்லியன் தொகை குறைநிரப்பு மதிப்பீட்டினூடாக வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டினுள் கம்பனியானது ரூபா 1,194.7 மில்லியனை பெற்றிருந்தது. எனினும், மேற்குறித்த தொகையில் கம்பனியின் செயற்பாட்டு கிரயங்களுக்காக ரூபா 605.13 மில்லியனை செலவிட்டிருந்தது.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வங்கியின் இ-ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான பங்களிப்பாளர் என்பதால் 2003 யூலை 16 ஆந் திகதி அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனிக்கு நிதி மற்றும் நிர்வாக துறைகளில் முழுமையான சுயாதீனத்துவத்தினை பெற்றிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதிய வரையிலும் மேற்படி தீர்மானம் மாற்றமின்றி காணப்பட்ட போதிலும் தற்போது கம்பனி முழுமையாக திரண்ட நிதியத்தில் தங்கியுள்ளது.

(ஆ) கம்பனியால் இரு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இ-சமூர்த்தி செயற்திட்டத்தின் பாவனையாளர் தொடர்பு முகாமைத்துவம் (CRM) மற்றும் மனிதவள முகாமைத்துவம் (HRM) ஆகிய மொடியூல்களிக் ஒத்துழைப்பு மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தங்கள் 2017 செப்தம்பர் 14 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 3.98 மில்லியன் கொடுப்பனவை மேற்கொண்டதன் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(இ) முன்று செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பில் என்ட் மெலின்டா கேட்ஸ் பவுன்டேஷனிலிருந்து ரூபா 130.05 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. எவ்வாறெனினும், பில் என்ட் மெலின்டா கேட்ஸ் பவுன்டேஷனுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 126.2 மில்லியன் தொகை கம்பனியின் ஏனைய செயற்பாட்டு செயலினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி செயற்திட்டங்களின் நிறைவு காலம் 2018 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உடன்படிக்கை காலாவதியான பின்னர் பயன்படுத்தப்படாத பணம் கம்பனியினால் பில் என்ட் மெலின்டா கேட்ஸ் பவுன்டேஷனுக்கு மீள கையளிக்கப்பட வேண்டும்.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பிறப்பு சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகள், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள், முன் அனுபவங்கள் தொடர்பான சேவைக் கடிதங்கள், செயலாற்றல் மதிப்பீட்டு தரவுகள், கடமை விபரம் மற்றும் கடமைப் பட்டியல் ஆகியன உள்ளடக்கப்படாமையால் அனைத்து ஊழியர்களினதும் தனிப்பட்ட கோவைகள் முழுமையற்றதாக காணப்பட்டன.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

அனைத்து அரச நிறுவனமும், 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்பட வேண்டும். மீளாய்வாண்டில் கம்பனி தமது விடயப்பரப்பிற்கு உட்பட்ட விடயங்களின் கீழ் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் அறிந்திருந்தது. இது தெர்ர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பில் அறிந்ததன் பின்னர், அனைவரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்நாள் முழுவதுமான கல்வியினை மேம்படுத்தல், அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை தூண்டுதல், அனைவருக்கும் வேலைவாய்ப்பு மற்றும் கௌரவமான தொழில், பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், நிலைபேறான கைத்தொழில் மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்தல், அனைத்து நகரங்களையும் உள்ளடக்குதல், பாதுகாப்பு, தாங்கக்கூடிய தன்மை மற்றும் நிலைபேறான தன்மை மற்றும் நீதியை ஊக்குவித்தல், சமாதானமான அனைத்தையும் உள்ளடக்கிய நகரங்கள் ஆகியன அவர்களின் விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டும். எனினும், 2030 ஆம் ஆண்டு வரையான இலக்குகள் மற்றும் மைல்கற்களை இனங்காண எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராததுடன், கம்பனியால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரமே இலக்குகள் மற்றும் மைல்கற்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2017 யூன் 01 ஆந் திகதியளவில் பெற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படை தரவுகளை பெற்றுக்கொளவதற்கு பதிலாக 2017 யூன் மாதம் முதல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிர்ணயிப்பதற்காக 2018 ஏப்ரல் வரையான அடிப்படை தரவுகள் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தன.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 5.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 595 பெறுகை நடவடிக்கைகளில் மீளாய்வாண்டின் போது 236 பெறுகை நடவடிக்கைகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஒருங்கிணைந்த நுழைவுச்சீட்டுக்கள் மற்றும் பட்டியலிடல் தளம் (ICTA / GOSL / CON / QBS / 2016/176) அமுல்படுத்துவதற்கான மதியுரை சேவைகளின் பெறுகைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 50 மில்லியன் கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெினினும் மதியுரையாளர்களை தெரிவு செய்வதற்கான மற்றும் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டி – 2007 இன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட மதியுரையாளருக்கு செல்லுபடியான காலப்பகுதியினுள் அல்லது 2018 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்மொழிவின் செல்லுபடியான காலத்தினை நீடிப்பு செய்ய நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கேள்விக்கான அழைப்பின் 07 ஆம் பிரிவின் பிரகாரம், வைரஸ்களுக்கு எதிரான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வியினை (ICTA / GOSL / GOODS / NCB / 2016/69-A) மதிப்பீடு செய்யும் போது விலைகேள்வியாளரின் முன் அனுபவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனினும், அது விலைக்கேள்வியாளர்களை தெரிவு செய்வதற்கான ஆகக் குறைந்த தகைமையான போதிலும், தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளரால் முன் அனுபவம் குறித்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் அது தெரிவு செய்வதற்கான அடிப்படை தகுதியாக கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை அரசினால் மெட்ரிட் புரட்டகோலிற்கு பிரவேசிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட இ-என்ஜபிழ செயற்திட்டத்தியை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் தயாரிப்படுத்தப்பட வேண்டிய தேவையான

மென்பொருள் மற்றும் இணைய கருவிகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக கம்பனியினால் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி தேசிய புலமைச்சொத்து ஆதனங்கள் அலுவலகத்துடன் (NIOP) புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று (MOU) கைச்சாத்திடப்பட்டிருந்தது. புரிநதுணர்வு உடன்படிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் மாதத்தின் போது என்ஐபீழ இனால் கம்பனிக்கு ரூபா 32.5 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பெறுகை நடவடிக்கைகள் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) போட்டி அடிப்படையிலான தெரிவு முறையினை பின்பற்றாது, ஒரு மூலத்தினை அடிப்படையாக கொண்ட தெரிவு முறைமையை பின்பற்றி ஒப்பந்ததாரர்களுக்கு இ-சேவைகள், www.gov.lk மற்றும் இ-வருமான அனுமதிப்பத்திரம் ஆகிய உதவி மற்றும் பராமரிப்பு ஒப்பந்தங்கள் மூன்று கையளிப்பு செய்யப்பட்டிருந்தன. மேலும், கம்பனி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் 2016 சனவரி 04 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. எனினும், கேள்வி கோரல் (REF) மதிப்பீட்டு அறிக்கைகள் மதிப்பீட்டு குழுவினால் 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, பெறுகைகள் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை கேள்விக்குரியதாக இருந்தது.

(ஊ) மாகாண போக்குவரத்து திணைக்களத்திற்கு தேவையான ரூபா 598,050 பெறுமதியான மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 29 அந் திகதிய தெரிவு செய்யப்பட் விலைக்கேள்வியாளரால் வழங்கப்பட்ட உற்பத்தி அதிகாரத்தினை கையளிக்கும் கடிதம் அதற்கு உரிய மாதிரியில் இல்லாதிருந்ததுடன், அது டெல் உற்பத்திகளுக்கான அதிகாரமளிக்கும் நிபந்தனைகளை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது. அதனால், இது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 7.8.4 இன் பிரகாரம் முக்கியமான விலகலொன்றாக அவதானிக்கப்பட்டது.

(எ) இ-ஆர்எல் தரவு இடப்பெயர்வுக்காக (ICTA / GOSL / CON / IC / 2016/77) தனிப்பட்ட ஆலோசகர்களை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் இ-ஆர்எல் நட்ட வருமான அறிக்கையினை தயாரித்தல் மற்றும் சிக்கலான மேம்படுத்தல்களை அமுல்படுத்தல் (ICTA / GOSL / CON / IC / 2016 / 174)

i. இ-ஆர்எல் தரவு இடப்பெயர்வுக்காக (ICTA / GOSL / CON / IC / 2016/77) தனிப்பட்ட ஆலோசகர்களை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் இ-ஆர்எல் நட்ட வருமான அறிக்கையினை தயாரித்தல் மற்றும் சிக்கலான மேம்படுத்தல்களை அமுல்படுத்தல் (ICTA / GOSL / CON / IC / 2016 / 174) ஆகியவற்றுக்காக கம்பனியினால் பின்பற்றப்பட்ட பெறுகை நடைமுறையானது அதன் அனைத்து முன்மொழிவுகளும் ஒரு உத்தியோகத்தரால் மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு, முன்மொழிவு தயாரிக்கும் காலப்பகுதியில் செயற்திட்ட முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையால், கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக காணப்பட்டது.

ii. முறையான வேலைத்திட்டமொன்றினை பெற்றுக்கொள்ளாமையால், இ-ஆர்எல் தரவு இடப்பெயர்வுக்காக தனிப்பட்ட ஆலோசகர்களை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தமானது 2016 திசெம்பர் 31 இலிருந்து 2017 ஆகஸ்ட் 29 வரை 3 தடவைகள் நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன், மற்றும் இ-ஆர்எல் நட்ட வருமான அறிக்கையினை தயாரித்தல் மற்றும் சிக்கலான மேம்படுத்தல்களை அமுல்படுத்துவதற்காக தனிப்பட்ட ஆலோசகர்களை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தமானது 2017 ஒக்தோபர் 19 வரை 04 வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்தல், பதிவேட்டிற்கு உட்படுத்தல், உரித்து மாற்றம் மற்றும் பாதுகாத்தலுடன் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதியியல் முகாமைத்துவம் | ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் அமுல்படுத்தல். |
| (இ) | பெறுகைகள் | பெறுகைக் கோவைகள் திருப்திகரமான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பாதீடு | மூலதன செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் சம்பளங்களை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |